Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

FRIDAY, MAY 31, 2024

வெள்ளிக்கிழமை மே 31, 2024 | ஒளி: 09 கதிர்: 263 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# காணி அளவீடு செய்வது நிறுத்தம்

## ஸ்ரீதரன் முன்மொழிந்தார்; அங்கஜன் வழிமொழிந்தார்

## படைத் தரப்பினரும் பங்கேற்று இருந்தனர்

■ நிதர்ஷன் வினோத்

யாழ். மாவட்டத்தில் படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளைக் சுவீகரிக்கும் நோக்கில் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் நிறுத்த வேண்டுமென யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ச்சி P2





## "அடாவடியில் ஈடுபடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை"

■ நிதர்ஷன் வினோத்

யாழ். போதனா வைத்தியசாலையின் மகிமையையும் ஊழியர்களின் பாதுகாப்பையும் கருதி அடாவடியில் ஈடுபடுபட்ட நபர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இனி வரும் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஏற்படாத வகையிலான முன்னுதாரணமாக குறித்த நடவடிக்கை இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2



## தேயிலை, கோப்பி பிரச்சினை தீவிரம்

### களத்துக்குச் சென்றார் ஜீவன்

■ ஆ.ரமேஸ், செ.திவாகரன், டி.சந்ரு

உடரதல்ல தோட்ட தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், வியாழக்கிழமை(30) முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குத் திரும்ப பணிப்பு



நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார். தொடர்ச்சி P2

## தொழிற்சங்க பணிக்காக கௌரவிப்பு



தேசபந்து லெஸ்லி தேவேந்திரவின் தொழிற்சங்க பணிகளுக்கு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை(29) இடம்பெற்ற நிகழ்வில், அதிதியாக பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நினைவுச் சின்னமொன்றை வழங்கினார்.

## சுழிபுரத்தில் காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

■ பு.கஜிந்தன்



சுழிபுரம்-திருவடிநிலை காட்டுபுலத்தில் கடற்படை முகாமிற்காக மேற்கொள்ளப்படவிருந்த காணி சுவீகரிப்பு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள், காணி உரிமையாளரின் எதிர்ப்பினையடுத்து வியாழக்கிழமை (30) கைவிடப்பட்டது.

தொடர்ச்சி P2



## நீர் மின் உற்பத்தி 60% அதிகரிப்பு

தற்போது பெய்து வரும் கடும் மழையால் நீர் மின் உற்பத்தி சுமார் இரு மடங்கு அதிகரித்துள்ளது.

தற்போதைய மழை நிலைமையுடன் நீர் மின் உற்பத்தி 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## "2,321 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும்"

■ மொஹொமட் ஆஸிக்

பெருந்தோட்ட தொழிலாளர் ஒருவருக்கு ஆகக் குறைந்த பட்சம் நாளொன்று 2,321 ரூபாய் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளி விபரவியல் துறைப் பேராசிரியர் கலாநிதி எஸ். விஜயச்சந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "கார்த்திகை மலர் பொறித்த பாதணிகளை மீளப் பெறவும்"



கார்த்திகை மலர் மிதிபடும் ஒன்றாக்கியதன் மூலம் தமிழர்களின் அரசியலை மிதித்தழிப்போம் என பகிரங்கமாகவே கர்ஜிப்பதாகவே உள்ளது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புகைத்தலால் 50 பேர் மரணம்

நமது நாட்டில் புகைத்தல் பாவனையால் நாளாந்தம் 50 பேர் உயிரிழப்பதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், புகைப் பிடிப்பதால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20,000 பேர் உயிரிழப்பதாக நிலையம் சுட்டிக்காட்டுகிறது.

உலக புகையிலை எதிர்ப்பு தினம் (மே.31) ஆம் திகதியாகும். இது தொடர்பாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புகையிலைத் தொழிலின் குறுக்கீட்டிலிருந்து நமது சிறுவர்களைப் பாதுகாப்போம்" என்பதே உலக புகையிலை எதிர்ப்பு தினத்தின் இவ்வாண்டு தொனிப்பொருளாகும்.

தற்போது இலங்கையில் சிகரெட் பாவனை 9.1 வீதத்தால் குறைந்துள்ளதுடன் இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பாவனை வேகமாகக் குறைந்து வருவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



## புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் மாற்றத்துக்கு விரிவான திட்டம்

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பயன்படுத்துதல் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியின் எதிர்காலப் போக்குகள் குறித்து ஆராய விரிவான திட்டம் ஒன்றின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில், புதன்கிழமை (29) இடம்பெற்ற "வலுசக்தி மாற்றத்தின் எதிர்காலப் பாதை" எனும் தலைப்பில் இடம்பெற்ற வட்ட மேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைச் சுட்டிக்காட்டினார். உலக வங்கி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வட்ட மேசை கலந்துரையாடல், இலங்கையின் வலுசக்தி மாற்றம் குறித்துக் கலந்துரையாடும் தளமாக அமைந்தது. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# காணி அளவீடு செய்வது நிறுத்தம்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் வியாழக்கிழமை(30) நடைபெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன், காணி சுவீகரிப்பு தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து கருத்து வெளியிட்டார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் படையினருக்காக பொது மக்களின் காணிகளைச் சுவீகரிக்க தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய இன்றும் கூட சுழிபுரத்தில் மக்களின் காணிகளைப் படையினருக்குச் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவீடு செய்ய இருந்தனர்.

எனினும், காணி உரிமையாளர்கள் பொது மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் காணி அளவீடு செய்ய அங்கு வந்திருந்த நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருக்கின்றனர். இவ்வாறு பல இடங்களிலும் காணி அளவீடு செய்ய வருகின்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

ஆனாலும் பொது மக்களின் காணிகளைப் படையினருக்கு வழங்க முடியாது. அத்தோடு படையினருக்குச் சுவீகரிக்கும் நோக்கில் அளவீடு செய்வதையும் நிறுத்த வேண்டும் என்பதுடன் தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன் போது படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதைத் தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள் என நில அளவைத் திணைக்களத்தினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து, யாழ். மாவட்டத்தில் படைகளின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் முன்மொழியப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் வழிமொழிந்தார்.

இக்கூட்டத்தில் இராணுவம், பொலிஸார், அரச திணைக்கள அதிகாரிகள் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "அடாவடியில் ஈடுபடுவோர்...

யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வியாழக்கிழமை (30) நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோரிடம் அது குறித்து விளக்கம் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்த பின்னர் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

இதன்போது யாழ் வைத்தியசாலை அசம்பாவிதங்கள் குறித்து கருத்துக்கூறிய பணிப்பாளர் சத்தியமூர்த்தி "வைத்தியசாலைக்கு நாளாந்தம் குறைந்தது 5,000க்கும் அதிகமானவர்கள் அவசர நோயாளர் பிரிவுக்கு பல்வேறு அவசர உயிர் காப்பு தேவை கருதி வருவதுண்டு.

அதுமட்டுமல்லாது, இவ்வாறு வருபவர்கள் பலவகையான வாகனங்களில் வருகைதருவதால் உயிர் பாதுகாப்பைக் கருதி தடையின்றி உள்ளே அனுமதிப்பது வழமை. அந்த நடைமுறையை தமக்கு சாதகமாம ஒருசிலர் பயன்படுத்துவதால்தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றது" என்றார்.

"இவ்வாறான சம்பவங்களை வைத்து அவசர நோயாளர் பிரிவு நுழைவாயிலில் இறுக்கமான நடைமுறையைக் கொண்டு வரவும் முடியாது.

அந்தவகையில் வைத்தியசாலையின் பாதுகாப்பு அதன் மகிமைகள் குறித்து இளைஞர்கள் அதிக கரிசனை எடுப்பதனூடாகவே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையைக் கட்டுப்படுத்தலாம்" என்றார்.

இதற்கு அனைவரது குறிப்பாக இளைஞர்களது ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கூறியிருந்தார்.

அத்துடன் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கடுமையான பிரிவுகளில் சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், வைத்தியசாலையின் பாதுகாப்பில் பொலிஸாரின் பங்கு அதிகளவில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ள அமைச்சர், பொதுமக்களும் வைத்தியசாலையின் பாதுகாப்பு மற்றும் நலன்களில் அக்கறை கொள்வது அவசியம் என்றும் வலியுறுத்தினார். இதேநேரம் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இனிவருங் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதவகையில் நடவடிக்கை அமைவதும் அவசியம் என்றும் உரியத் தரப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேயிலை, கோப்பி...

தோட்ட நிர்வாகத்தின் தான்தோன்றித் தனமான செயற்பாட்டைக் கண்டித்துக் கடந்த ஒருமாத காலமாகப் பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை நானுஓயா- உடரதல்ல தோட்டத் தொழிலாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இப்பிரச்சினைக்கான தீர்வை, தொழிற் சங்கம்,தோட்ட நிர்வாகம் மற்றும் தொழில் திணைக்களம் இணைந்து பெறவேண்டும் மாறாகத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தொழிற்சங்க பிரச்சினையில் பொலிஸார் தலையிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உடரதல்ல தோட்டத்தில் இலக்கம் (05) தேயிலை மலையில் தேயிலைச் செடிகளை அகற்றி அங்கு கோப்பி பயிரிட களனிவெளி பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் உடரதல்ல தோட்ட நிர்வாகம் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இந்த நிலையில் அத்தோட்டத் தொழிலாளர்கள் "தேயிலையை அழிக்காதே கோப்பியைப் பயிரிடாதே" என்று தோட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டைக் கண்டித்து தொழில் பகிஷ்கரிப்பில் கடந்த ஒரு மாதமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தோட்ட நிர்வாகம் தேயிலையைப் பிடுங்கத் தோட்டத்திற்குள் இயந்திரத்தைக் கொண்டு வந்த நிலையில் அதைத் தடுத்து நிறுத்திய தோட்டத் தொழிற்சங்க தலைவர் உள்ளிட்ட மூவர் மீது தோட்ட நிர்வாக அதிகாரி பொலிஸ் முறைப்பாடு செய்து தொழிற் பிரச்சினையை பொலிஸ் பிரச்சினையாக மாற்றியுள்ளார்.

இதைத் தொடர்ந்து குறித்த தோட்ட தலைவர் மற்றும் மேலும் இருவருக்குத் தொழில் நீக்கம் செய்துள்ளார்.இந்த நிலையில் தொழில் நீக்கம் செய்தவர்களுக்குத் தொழில் வழங்க வேண்டும்,கோப்பி பயிரிடுவதை நிறுத்த வேண்டும் என தொழிலாளர்கள் தொழிற்சங்க பேதமின்றி தீர்வு கிடைக்கும் வரை பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருமாத காலமாக நீடித்த பணி பகிஷ்கரிப்புக்குத் தீர்வு பெறும் வகையில் நுவரெலியா உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் தொழிற்சங்கம் மற்றும் தோட்ட நிர்வாகத்திற்கு இடையில் பேச்சுவார்த்தை உதவி தொழில் ஆணையாளர் முன்னிலையில் வியாழக்கிழமை (30) இடம்பெற்றது.

இந்த பேச்சு வார்த்தையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொழிற்சங்க சார்பாகக் கலந்து கொண்டார். இருப்பினும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இரு தரப்பினரிடத்திலும் இணக்கப்பாடு எட்டவில்லை என்பதால் அமைச்சர் வெளிநடப்பு செய்தார்.

## சுழிபுரத்தில் காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

சுழிபுரம் காட்டுப் புலம் பகுதியில் உள்ள 4 பரப்பு தனியார் காணியினை, கடற்படையினரின் காணி சுவீகரிப்பிற்காக காட்டுப் புலத்திற்கு வருகை தந்த நில அளவை திணைக்களத்தின் அதிகாரிகள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இந்நிலையில், தாம் திரும்பிச் செல்வது தொடர்பில் மேலதிகாரிக்கு அறிவிக்க வேண்டும் என நில அளவை திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன், நில அளவை திணைக்களத்தின் மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டு பொதுமக்களின் எதிர்ப்பினை தெரிவித்தார்.

இந்நிலையில், களத்தில் நின்றிருந்த நில அளவை திணைக்கள அதிகாரிகள், மேலதிகாரியினால் மீள வரும்படியாகப் பணிக்கப்பட்டது.

உரிமையாளர்களின் எதிர்ப்பு கடிதமும் சட்டத்தரணி சுகாசினால் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவ்விடத்தை விட்டு நில அளவை திணைக்களத்தினர் அகன்று சென்றனர்.

இதன் பொழுது இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## புகைத்தலால் 50 பேர் மரணம்

புகையிலை நிறுவன அறிக்கைகளின்படி, கடந்த ஆண்டில் சிகரெட் உற்பத்தி 19 சதவீதம் குறைந்துள்ளது.

உலகில் சிகரெட் பாவனை குறைவடைந்து வரும் நாடுகளில் இலங்கையில் நல்ல போக்கு காணப்பட்டாலும் இன்னும் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட் பாவனையில் ஈடுபடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைவரத்தை கருத்தில் கொண்டு இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சிகரெட் பயன்படுத்துவதற்குப் பன்னாட்டுப் புகையிலை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைப் பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாக கொழும்பு - லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் சந்தன டி சில்வா தெரிவித்துள்ளார்.

## புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் மாற்றத்துக்கு விரிவான திட்டம்

அண்மையில் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம் (Pricewater house Coopers) பசுமை ஹைட்ரஜன் தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையின் மீது கவனத்தைச் செலுத்திய ஜனாதிபதி, அந்த அறிக்கையின் முக்கியத்துவத்தையும், வளர்ந்து வரும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை மேலும் ஊக்குவிக்கும் விரிவான திட்டத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதன்போது, உள்நாட்டு நிபுணத்துவத்தைப் பெறுவதில் உள்ள சிரமங்களைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

நிலைபேறான மற்றும் போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இதில் முக்கிய பங்களிப்பை ஆற்றுவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, மின்சார மறுசீரமைப்பு சட்டமூலம் மற்றும் காலநிலை மாற்ற சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்காகச் செயற்படும் இலங்கை தற்போது புதிய பொருளாதார கட்டமைப்பில் கவனம் செலுத்தியுள்ளது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாறுவதே எமது நோக்கமாக உள்ளதுடன், அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக அது இருக்க வேண்டும் என்றார்.

## பல்கலைக்கழக ஊழியர்களை...

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த 27 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாகப் பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## நீர் மின் உற்பத்தி 60% அதிகரிப்பு

மழையுடனான வானிலை ஆரம்பமாகுவதற்கு முன்னர் நீர் மின் உற்பத்தியானது 20 சதவீதமாகவே காணப்பட்டதாக அவர் கூறினார்.

39 சதவீதமாக காணப்பட்ட நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு, தற்போது 60 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## "2,321 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும்"

பேராதனை ஒக்-ரேய் ஹோட்டலில் நடத்திய ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

தனது தலைமையில் 2018ஆம் ஆண்டு முதல் மேற்கொ ள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், 2024ஆம் ஆண்டின் செலவினங்களுக்கு அமையவே இந்தத் தொகையை நாளாந்த சம்பளமாக வழங்கவேண்டும் என்றார்.

கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சமூக அபிவிருத்தி நிறுவகம் இதற்கான அனுசரணையை வழங்கி இருந்தது. மேற்படி நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெ. முத்துலிங்கம் தலைமையிலேயே ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

புள்ளி விபரவியற் திணைக்களம், மத்திய வங்கியின் தரவுகள். நுகர்வோர் வாழ்க்கைச் சுட்டென் போன்ற இன்னோரன்ன அரச தகவல்கள் மற்றும் களவிஜயங்கள் மூலம் பெறப்பட்ட நேரடித் தகவல்களின் கூட்டு மொத்த அம்சங்களின் அடிப்படையில் பெருந்தோட்டப் பகுதி தொழிலாளி ஒருவரின் வாழ்வாதாரத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த ஒரு நாளைக்கு அவருக்கு 2,321 ரூபாய் தேவைப்படுகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சராசரியான ஒரு குடும்பத்திற்கான மாதாந்த உணவுச் செலவுகள், வீட்டுப் பராமரிப்பிற்கான செலவுகள், மருத்துவச் செலவுகள், பாடசாலைப் பிள்ளைகளின் கல்விச் செலவு போன்ற பல்வேறு செலவுகள் கவனத்திற்கொள்ளப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டதாகவும், ஒரு குடும்பத்தில் சராசரியாக 1.5 பேர் உழைப்பதாகவும் கருதப்பட்டு இவ் ஆய்வு கணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அதிலும் அரசினால் வழங்கப்படும் சில சகாயங்களைக் கழித்ததே அது பெறப்பட்டது. அதிலும் எதிர்பாராத செலவுகள் போன்றன உற்படுத்தப்பட வில்லை. உதாரணமாக பெருந்தோட்டங்களில் மதுவுக்கான செலவுகள் அதிகம் காணப்படுகிறது. இவைகள் போன்றன உற்படுத்தப்பட வில்லை.

ஏற்கெனவே அமுலில் இருந்த கூட்டு ஒப்பந்தத்தின் படி இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வேதனம் மீளாய்வு செய்யப்பட்டன. உதாரணமாக 2018ஆம் ஆண்டு ஒருநாள் செலவு 1,108 ரூபாவாகவும் 2022ஆம் ஆண்டில் 2,162 ரூபாவாகவும் அது காணப்பட்டது. ஆனால், 2019ம் ஆண்டளவில் ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் என்ற கோசம் எழுப்பப்பட்டது. 2019ஆம் ஆண்டு முதல் இன்று வரை வாழ்க்கைச் செலவு பாரியளவில் உயர்ந்துள்ள நிலையில் 5 வருடங்களுக்கு முன் உள்ள தொகை தோட்டத் தொழிலாளிக்கு எப்படியுமே பொருந்தாத ஒரு தொகையாகும்.

அத்துடன் மாதம் 25 நாட்களுக்கு வேலை வழங்கப்படுகிறது என்ற அடிப்படையிலே இது கணிக்கப்பட்டுள்ளது. வேலை நாட்கள் குறைக்கப்பட்டால் அதன் தாக்கம் இன்னும் அதிகரிக்கலாம் என்றார்.

சுமார் 63 சதவீதமான குடும்பங்களது வருமானம் குறைந்துள்ள அதே நேரம் 90 சதவீதமான குடும்பங்களது சராசரி செலவும் அதிகரித்துள்ளது.

எனவே, ஒருதோட்டத் தொழிலாளிக்கு ஆகக் குறைந்த ஒருநாள் வேதனமாக 2,321 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பதே இந்த ஆய்வின் முடிவாகும் என்றார்.

## "கார்த்திகை மலர் பொறித்த பாதணிகளை மீளப்பெறவும்"

அவரால் வியாழக்கிழமை (30) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல பாதணி உற்பத்தி நிறுவனமான டி.எஸ்.ஐ. கம்பெனி அண்மையில் சந்தைப்படுத்தியுள்ள தனது உற்பத்தி ஒன்றில் கார்த்திகை மலரைப் பதிவிட்டுள்ளது. இது இலங்கையின் பேரினவாத அரசியல் முதலாளித்துவத்தினையும் எந்த அளவிற்கு ஆக்கிரமித்துள்ளது என்பதைக் காட்டுவதோடு தமிழர்களின் அரசியல் அடையாளங்களில் ஒன்றான கார்த்திகை மலரை மிதிபடும், மிதிக்கப்படும் ஒன்றாக்கியதன் மூலம் தமிழர்களின் அரசியலை மிதித்தழிப்போம் என பகிரங்கமாகவே கர்ஜிப்பதாக உள்ளது. இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு தமிழ் உணர்வு மிக்க தேசப்பற்றார்கள் இதற்கு தகுந்த பாடத்தை வெளிப்படுத்த வேண்டும்.

யாழ் தெல்லிப்பளையில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றில் இம்மலர் அலங்காரத்துக்குப் பாவிக்கப்பட்ட போது அப்பாடசாலையில் அதிபர் உட்பட ஆசிரியர்களை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். இதே போன்று மேற்படி குறித்த பாதணி கம்பனியின் திட்டமிடல் வடிவமைப்பு சந்தைபடுத்துனர்கள் விற்பனை முகவர்கள் என பலதரப்பினரையும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்துவார்களா? சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள பாதணிகளை மீளப்பெற அதிகாரத்தைப் பயன்படுத்துவார்களா? என பொலிஸ் மா அதிபரை கேட்கிறோம்.

கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரப்பட்ட போது சுகாதாரத்தைக் காரணம் காட்டி அதனைத் தடுத்து நிறுத்தி அடாவடித்தனம் புரிந்த பொலிஸார் அதற்கடுத்து கடந்த கிழமை விசாக பண்டிகை காலத்தில் அதே சுகாதாரத்தைக் காரணம் காட்டி எந்த ஒரு உணவு பகிர்களையும் தடுத்து நிறுத்தியதாக அடாவடித்தனம் புரிந்ததாகச் செய்திகள் வரவில்லை.

இது தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்கள பௌத்தர்களுக்கு ஒரு நீதி எனும் பௌத்த பேரினவாதத்தின் அரசியலை வெளிப்படுத்தியது என்றார்.

# “எமது கட்சிக்கு யாரும் அரசியல் பாடம் எடுக்க தேவையில்லை”

ஜனநாயகத்தின் தாயகமே ஐக்கிய தேசியக் கட்சிதான். எனவே, ஜனநாயகம் பற்றி எமது கட்சிக்கு யாரும் அரசியல் பாடம் எடுக்க தேவையில்லை. அரசமைப்பின் பிரகாரம் உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்று பேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

“ஜனநாயகத்தை அதிகம் மதிக்கும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியும், தலைவராக ரணில் விக்ரமசிங்கவும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இறங்காது என்பது ஊரறியும், உலகறியும்.

எனினும், எதற்கெடுத்தாலும் அறிக்கை விடுத்தும், அறிவிப்புகளை விடுத்தும் அரசியல் நடத்தும் வாய்ச்சொல் வீரர்கள், எமது கட்சியின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள கருத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு கட்சிக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர். இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது கட்சியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்ட கருத்தை ஆழமாக ஆராயாமல் இவ்வாறு அறிவிப்புகளை விடுப்பது சிறுபிள்ளைத்தனமானது. நாட்டு மக்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் மேலதிக சுமை தேவையில்லை, நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்ட பின்னர், சுதந்திரமான சூழலில் தேர்தலை நடத்துவதே ஜனநாயக பண்பு என்ற தொனியிலேயே அவர் கருத்தை வெளியிட்டிருந்தார். இது ஒரு கோரிக்கை மாத்திரமே, மாறாக அரசின் முடிவு அல்ல.

நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் எப்படி நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியும் என்பதே அவரின் வாதமாகும். அவரின் கருத்திலும் நியாயம் இல்லாமல் இல்லை. எது எப்படி இருந்தாலும் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்களை நடத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியாக உள்ளார்” என்றுள்ளது.



## சிகிச்சைக்கு சென்ற பெண் விபத்தில் பலி

எம்.றொசாந்த்

கணவருடன் மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்று, வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்ப பெண் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ள சம்பவம் யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பகுதியில் புதன்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய சரோஜினி தேவி அல்பேர்ட் வில்லியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் குறித்த பெண் கடந்த சில நாட்களாக சுகவீனமடைந்திருந்த நிலையில் மருத்துவ சிகிச்சைபெற அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு , கணவனுடன் துவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, பின்னால் வேகமாக வந்த கார் இவர்களை மோதி தள்ளியுள்ளது.

இதன்போது குறித்த பெண் தூக்கி வீசப்பட்டு, படுகாயமடைந்த நிலையில், தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் காரின் சாரதியை கைது செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 82 கிலோ கிராம் ஆமை இறைச்சியுடன் இருவர் கைது

எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி கடலாமை இறைச்சிகளுடன் 2 சந்தேக நபர்கள் வியாழக்கிழமை(30) பள்ளமடு பிரதான வீதியில் வைத்து மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 82 கிலோ கிராம் கடலாமை இறைச்சி பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மீன்கள் பொதி செய்து கொண்டு செல்லும் போர்வையில் குறித்த கடலாமை இறைச்சி பொதி செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டது.

இராணுவ புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பள்ளமடு வீதியில் வைத்துக் குறித்த வாகனத்தைச் சோதனை செய்த போது குறித்த கடலாமை இறைச்சிகள் மீட்கப்பட்டுள்ளதோடு அதைக் கொண்டு சென்ற இரண்டு நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மயங்கி விழுந்த சிறுவன் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 16 வயதுடைய சிறுவன் புதன்கிழமை (29) உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை, ஹைராத் வீதியைச் சேர்ந்த ஆசிப் ஷைபுல்லாஹ் எனும் சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

குறித்த சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை (24) அன்று மயங்கி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உணர்வற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த சிறுவன் புதன்கிழமை (29) மரணமடைந்துள்ளார்.

சிறுவனின் உடல் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் வியாழக்கிழமை (30) பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐவரில் ஒருவர் சிக்கினார்

கிளிநொச்சி- திருவையாறு பகுதியில் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவையாறு பகுதியில் சந்தேகத்துக்கிட்டமாகச் சிலர் தங்கி இருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய, பொலிஸாரால் குறித்த வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்ட போது, வீட்டில், 2 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் இருந்தமையால் குறித்த வீட்டில் தங்கி இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட்ட ஐவர் செவ்வாய்க்கிழமை (28) கைது செய்யப்பட்டிருந்தனர் .

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டதுடன் நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த இரு நாட்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட நான்கு பேர் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்

அத்துடன், போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை வியாழக்கிழமை (30) கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது அவரை எதிர்வரும் 10ம் திகதி வரை விளக்க மறியல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## “அரசியல் பேச தடை”

எம்.றொசாந்த்

யாழ். பொது நூலகம் எரிக்கப்ப ட்டமை தொடர்பிலான ஆவணப் படத்தினை, பொது நூலக கேட்போர் கூடத்தில் திரையிட அனுமதி வழங்கும் போது, அரசியல் பேசக் கூடாது என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவண படத்தினை கடந்த 17 வருட காலமாக திரையிடுவதற்கான முயற்சிகளைப் முன்னெடுத்து வந்த நிலையில் அது சாத்தியமாகவில்லை இந்நிலையில், யாழ். சிவில் சமூக நிலையம் ஊடாக குறித்த ஆவணப் படத்தினை திரையிட அனுமதி வழங்கிய மாநகர சபையினர், நிகழ்வில் அரசியல் எதுவும் பேசக் கூடாது என்று கூறியுள்ளது

அதனால், நிகழ்வு ஏற்பாட்டாளர்கள், நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்தில், “#அனுமதிக்கப்படவில்லை #அரசியலை பேசுதல்” என எழுதிய பதாகைகளைக் காட்சிப்படுத்தி இருந்தனர்.

## வாய்க்காலுக்குள் பாய்ந்த வேன்



தீஷான் அஹமட்

மூதூர்- பாலத்தோப்பூர் பகுதியிலுள்ள வாய்க்காலுக்குள் வேன் ஒன்று தடம் புரண்டு வீழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் வியாழக்கிழமை (30) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது வேன் சாரதி மாத்திரமே பயணித்துள்ளதுடன், அவர் எவ்வித காயங்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

மூதூரிலிருந்து தோப்பூருக்குச் சென்று திரும்பும் வழியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்விபத்து சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எமனாக மாறிய முடி உலர்த்தி

எம்.யூ.எம் சனூன்



புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் இருந்து இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவன் சலீம் மொஹமட் சஹ்ரான் மின்சார தாக்குதலுக்குள்ளாகி வியாழக்கிழமை (30) காலை உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டில் குளித்து விட்டு முடி உலர்த்தி (hair dryer) மூலம் முடியை உலர வைத்த சந்தர்ப்பத்திலேயே இவர் மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி புத்தளம் தள வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது மரண விசாரணைகளை மேற்கொண்ட புத்தளம் மற்றும் கல்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம், மின்சாரம் தாக்குதலினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்து ஜனாஸாவை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தார்.

இவரது ஜனாஸா வியாழக்கிழமை(31) இரவு புத்தளம் பகா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.












## இலங்கை இளைஞர்களை மீடக சென்ற எதிர்க்கட்சி குழு

இணைய குற்றவாளிகளின் பிடியில் சிக்கியுள்ள இலங்கை இளைஞர்களை மீட்பதற்காக மியன்மார் சென்ற எதிர்க்கட்சி பாராளுமன்ற குழு, அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சரையும், அந்நாட்டுப் பிரதம சங்கநாயக தேரரையும் புதன்கிழமை (29) சந்தித்துக் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஜே.சி. அலவதுவல, சட்டத்தரணி வசந்த யாப்பா பண்டார, சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோர் மியன்மாரின் மியாவாடி பகுதியில் இணையக் குற்றவாளிகளால் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள 49 இலங்கை இளைஞர்களை மீட்பதற்காக, மியன்மாரின் யங்கூன் நகரிலிருந்து சுமார் 500 கி.மீ தொலைவில் Nay Pyi Taw நெபிட்டோ நகரில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் காலை 11.30 மணிக்குப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர்.

மியன்மார் பிரதமர் சார்பில் அந்நாட்டு வெளிவிவகார பிரதி அமைச்சர் H.E.U. Than Swe அவர்கள் உள்ளிட்ட இராஜதந்திர அதிகாரிகள் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

இங்கு இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாசவால், குறிப்பாக இந்த குழுவை மீட்டித் தருவது தொடர்பான இராஜதந்திர பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து யங்கூன் நகரில் அமைந்துள்ள Shwe Dagon Pagoda மியன்மார் விகாரையில் வசிக்கும் மியன்மாரின் பிரதம சங்கநாயக தேரரான Thanlyin Min Kyaung Sayardaw அவர்களுடனும் இந்த இளைஞர்களை மீட்பதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் மூன்று பிரதான பௌத்த பீடங்களின் (நிக்காய) மகாநாயக்க தேரர்களின் கையொப்பம் அடங்கிய, இவ்விளைஞர்களை மீட்பதற்கான விசேட கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை கையளிக்கும் நிகழ்வும் இரவு 07.30 மணியளவில் யங்கூன் விகாரையில் இடம்பெற்றுள்ளது.

# ‘புகை’ எனும் பகையை பகைக்க முடியாமல் திணறுகிறான்

பலவகையான கெட்ட பழக்கங்களை வழக்கமாகக் கொண்ட பலரும், இன்றுடன் விட்டுவிட்டேன், என சபதம் எடுத்து அடுத்த நாளே அதையே மீண்டும் ஆரம்பித்துவிடுவர். அதில், மது அருந்துதல், புகைப் பிடித்தல், ஆகிய இரண்டையும் கைவிடுவதாக ஒவ்வொரு முக்கியமான நாளிலும் பலரும் சபதம் எடுப்பதை அவதானித்திருக்கக் கூடும். அவ்வாறு இன்றும் பலரும் சபதம் எடுத்து, ஏனைய நாட்களில் ஊதித்தள்ளுவதை விடவும் சற்று அதிகமாகவே ஊதித்தள்ளிவிடுவர். ஏனென்றால், மே 31ஆம் திகதி உலக புகைத்தல் எதிர்ப்பு தினமாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் சேர்ந்து இந்நாளை 1987ஆம் ஆண்டில் சிறப்பு நாளாக அறிவித்தன. 1988ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் தீர்மானப்படி ஏப்ரல் 07ஆம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டாலும்கூட, அதேயாண்டில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி மே 31ஆம் திகதி, உலக புகைத்தல் தினம் அனுஷ்டிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

உலகில் மனித இறப்புகளைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இச்சிறப்பு நாளின் அறிவிப்பு மூலம் உலக சுகாதார நிறுவனம் புகைத்தலால் தமக்கும் பிறருக்கும் ஏற்படும் தீங்குகளிலிருந்து தவிர்ந்து கொள்வதை வலியுறுத்துவதன் மூலம் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான இறப்புகளைக் குறைக்க முடியும் எனவும் எதிர்பார்க்கிறது.

புகைத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடையாத பட்சத்தில் உலகளாவிய ரீதியில் அடுத்த 50 ஆண்டுகளில் பல மில்லியன் மக்கள், புகைப் பழக்கத்துக்குப் பலியாகும் அபாயம் உண்டு என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. இதனால் இன்று வளர்ந்தோரிடையேயும் இளைஞர்களிடையேயும் புகைப் பாவனையைத் தவிர்த்தல் தொடர்பாக வலியுறுத்தப்படுகிறது.

ஒரு நபர் புகைப் பிடிப்பதினால் அவருக்கு ஏற்படும் கெடுதலைவிட அவர் வெளியிடும் புகையைச் சுவாசிப்பவர் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார். புகையைச் சுவாசிக்க நேரும் மக்களுக்கு இதயம் தொடர்பான நோய்கள் வரும் வாய்ப்பு அதிகரிப்பதாக ‘நாட்டிங்காம்’ பல்கலைக்கழக ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி நுரையீரல் புற்றுநோய் 16 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு புகைப் பிடிப்பவர்களிடம் இன்றி பக்கத்தில் இருப்பவர்களிடமே ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கத் தேசிய போதைப்பொருள் தடுப்பு நிறுவனத்தின் முன்னையநாள் பணிப்பாளர் ‘வில்லியம் பொலின்’ வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில் குறிப்பிட்ட விடயங்கள் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியதே. ‘புகையிலை மதுவை விட ஏன் ஹெரோயினை விடவும் பாவனையாளர்களை அதிகம் அடிமைப்படுத்தக்கூடியது. ஓர் ஆண் வருடமொன்றுக்கு 1,900 சராசரியாக சிகரெட்டுகள் புகைக்கின்றனர்.

‘பகையைக் கூட புகையாய் ஊதித் தள்ளிவிடும் மனிதன் இந்தப் புகை என்னும் பகையைப் பகைக்க முடியாமல் திணறுகிறான்’. உண்மையில் புகைத்தலை ஏன் பலரால் நிறுத்த முடியாமல் இருக்கிறது? பணமும் விரயமாகி ஆரோக்கியமும் கெடுகின்றது என தெரிந்தும் புகைத்தலைக் கைவிட முடியாமல் இருக்கின்றனர் என்பதுதான் வெட்கக்கேடானது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க மௌனமும், ஒதுங்கி ஒளிவதும் சரிப்பிட்டுவராது. வீரமுடன் எதிர்கொண்டால் எல்லாம் சரிவர நிவர்த்தியாகிவிடும்.

ஆனால், பிரச்சினைகளுக்கு நீங்களே! காரணமாகி அதனைப் பிறர்மீது சாட்டுதல் செய்வது துரோகம். தேவையற்ற விதத்தில் உங்களை எவர் உட்படுத்தினால் அதனைக் கண்மூடிக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல.

இதனால் தேவையற்ற குற்றச்சாட்டுகளை ஏற்பது போலாகிவிடும். இன்று குடும்பங்களுக்குள் தேவையற்ற தர்க்கங்களினால் அமைதி குலைந்து நிற்கிறது.

சின்ன விஷயங்களுக்கும் ஆவேசப்படுகின்றார்கள். குடும்ப விஷயங்கள், தவறான புரிதலினால் உருவாகின்றன. எனவே, அதனை உடன் நீங்கிவிடலாம். அவை பூதாகாரமான விடயம் எனக் கருதலாகாது.

குடும்ப உறவு இறுக்கமானதாக இருக்கக் கோபங்களைக் களைவதுடன் குடும்ப அங்கத்தினரின் தேவைகளையும் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

பாசமிகு குடும்பத்தினர் எதனையும் ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை. ஒரு குடும்பம் பல குடும்பங்களுக்கு எடுத்துக்காட்டாகவேண்டும்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்.

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 2

# வெற்றியாளரின் தோல்வி மனநிலை



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் பின்னரான இலங்கை அரசின் போக்கை விளங்கிக் கொள்வது முக்கியமானது. இந்தப் போக்கைக் கடுமையாக விமர்சிக்கின்ற பலர், இலங்கை அரசு ஏன் இவ்வாறு நடந்து கொண்டது, இப்போதும் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறது போன்ற வினாக்களை ஆழமான விசாரணைக்குட்படுத்துவதில்லை. போருக்குப் பிந்தைய இலங்கை அரசின் போக்கு விசித்திரமானது. அது சிங்கள-பௌத்த தேசியவாத மற்றும் மேலாதிக்க அபிலாஷைகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது, செல்வாக்குக்கு உட்பட்டது. இது போரையும் அழிவையும் குற்றங்களையும் நியாயப்படுத்துகிறது.

சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் புதிய வழிகள் மற்றும் போரின் இறுதிக் கட்டத்திலும் போருக்குப் பிந்தைய உடனடியான காலப்பகுதியிலும் உச்சக்கட்டத்தை அடைந்து, அரசின் சிங்கள-பௌத்த இயல்பு மற்றும் அதன் அரசியலை நியாயப்படுத்தியது. சிறுபான்மையினருக்கான எந்த வகையான உரிமைகளையும் சுதந்திரங்களையும் நிராகரிக்கிறது.

ஒட்டுமொத்தமாக, அது நாட்டின் பல் கலாசாரத் தன்மையை ஏற்க மறுக்கிறது. இந்த நடத்தைக்கான காரணம் என்ன என்பதை நோக்க வேண்டியுள்ளது.

போரின் முடிவின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை ஒருங்கிணைத்து அனைத்து மக்களுக்கும் நியாயமானதும் ஏற்கக்கூடியதுமான ஒரு தீர்வை வழங்குவதன் மூலம் நிரந்தரமான நின்று நிலைக்கக்கூடிய அமைதியை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. ஏன் அதை மகிந்த ராஜபக்ஷ செய்யவில்லை என்ற புதிருக்கான விடை இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒழிந்திருக்கிறது.

மே 2009இல் போர் முடிவுக்கு வந்தது, தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக போரியல் ரீதியாக அழித்து இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்றது. இது ஒரு படைத்துறை வெற்றியாகும். ஆனால், போருக்குப் பிந்தைய காலமானது உண்மைகள் மேற்கத்திய மோதல் தீர்வு அடிப்படையிலான செயன்முறையை நோக்கி நகர்த்தவில்லை.

போருக்குப் பிந்தைய இலங்கை அனுபவமானது மிகவும் வேறுபட்டது.

போருக்குப் பிந்தைய இலங்கையின் ஆட்சியானது அதன் கொள்கைகளையும் கொள்கை அமுலாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரச்சினைகளைப் பார்ப்பதற்கும் தீர்வு காண்பதற்கும் அதன் சொந்த வழியைக் கொண்டிருந்தது.

இந்த பின்னணியில், தேசிய சிறுபான்மையினர் ஓரங்கட்டப்பட்டதாக உணர்கிறார்கள் மற்றும் போருக்குப் பிந்தைய சூழலில் அவர்களின் வாழ்க்கை ஏமாற்றமளிக்கும் வகையில் பரிதாபகரமானதாக மாறியுள்ளது. இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

யுத்தம் முடிவடைந்த பின்னர் அதில் இலங்கை அரசாங்கம் வெற்றிபெற்றது. சிங்களவர்களுக்கும் அவர்களின் சமூகத்திற்கும் அவர்கள் இழைத்த தவறான செயல்களுக்கும் துன்பங்களுக்கும் சிங்களவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டியவர்கள் தமிழர்கள் என்ற புதிய கதையாடல் உருவாக்கப்பட்டது.

இலங்கை ஒரு சிங்கள-பௌத்த நாடு என்பதாலும், சிங்கள-பௌத்த அரசின் அதிகாரத்தைத் தமிழர்களால் சவால் செய்யத் துணிய முடியாது என்பதாலும், தமிழர்கள், சிங்களவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்த பாதிக்கப்பட்ட மனப்பான்மை தீவிரவாத சக்திகளால் வெகுஜனங்களிடையே நன்கு வெளிப்படுத்தப்பட்டு, குறிப்பிடத்தக்க வகையில், தெற்கில் வெகுஜன ஈர்ப்பைக் கொண்டிருந்தது. தமிழர்கள் நடத்திய போரினால் கடந்த முப்பது வருடங்களாக இலங்கை அபிவிருத்தி அடையவில்லை என சிங்கள மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு தமிழர்களின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்களே.

போருக்குப் பிந்தைய தொடர்ச்சியான இலங்கை அரசாங்கங்கள் குறித்த வாதத்தை உள்வாங்கியுள்ளதோடு அதை நம்புவதாகத் தோன்றுகிறது.

புலிகள் மீதான இராணுவ வெற்றியை அரசியல் உயரடுக்குகள் பல பரிமாணங்களில் பிரதியெடுத்துள்ளன. இராணுவ வெற்றியைப் பெரும்பான்மையினரின் அதிகாரத்திற்குச் சவால் விட்ட சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் வெற்றியாக மொழி பெயர்ப்பது மிகவும் சுவாரஸ்யமானது.

வெற்றியாளர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் இந்த இருவகைப் போக்கு போருக்குப் பிந்தைய இலங்கை அரசில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மிக முக்கியமாக, இலங்கை சமூகம் அந்த வழிகளில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இந்த கருத்துடன் இணைக்கப்பட்ட அரசியல் கதையாடல்கள் உள்ளன. இதன் மூலம் அரசுக்கு எதிரான போர்க்குற்ற குற்றச்சாட்டுகள் தமிழர்களால் சிங்களவர்களை இழிவுபடுத்துவதாக விளக்கப்படுகிறது, அதேசமயம், சிங்கள அரசும் அதன் தலைமையும் சிங்களவர்களின் மீட்பர்களாக இருக்கும் நவீனக் கால மாவீரர்களாகப் பார்க்கப்படுகின்றன.

பொதுவாகப் போருக்குப் பிந்தைய இலங்கை சமூகத்தின் நடத்தை மற்றும் குறிப்பாக இலங்கை அரச இயந்திரத்தின் நடத்தையை வெற்றியாளர் மற்றும் பாதிக்கப்பட்டவர் என்ற கதையாடலின் அடிப்படையில், இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

பாதிக்கப்பட்ட மற்றும் வெற்றியாளர் அணுகுமுறை இலங்கை அரசாங்கத்திற்குப் பல வழிகளில் உதவியுள்ளது. அந்த அடிப்படையில் இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை விளக்கி, அதன் மூலம் அனைத்துலக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்து, போரில் பாதிக்கப்பட்ட சிங்கள சமூகத்தின் சார்பாகப் போராடி வெற்றி பெற்ற மக்களைப் பலிகடா ஆக்கும் சதியே சர்வதேச விசாரணை முயற்சிகள் என்று வியாக்கியானங்கள் வழங்கப்பட்டன.

போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் வடக்கில் தொடரும் இராணுவ மயமாக்கல் அலட்சியமாக நடந்துகொள்வது மற்றும் அரசியல் தீர்வுக்கான தேவையை மறுப்பது ஆகியவை இந்த மனநிலையின் பின்னணியிலிருந்து புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதன் மேலாதிக்கத்தை வலியுறுத்துகிறது.

இந்த யோசனை, மற்ற எதையும் விட,அரசியலிலும் சமூகத்திலும் ஆதிக்கம் செலுத்துகிறது மற்றும் நல்லிணக்கத்திற்கான எந்தவொரு உண்மையான முயற்சியையும் தடுக்கிறது. இதன் விளைவாக, சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையின் உத்தேசிக்கப்பட்ட விளைவுகளுடன் இலங்கை அதன் அபிவிருத்தி உந்துதல் என்று அழைக்கப்படுவதைக் கொண்டு வெகுதூரம் செல்லவில்லை.

சமூக நல்லிணக்கத்தை நோக்கிக் கட்டியெழுப்புவது ஒரு நீண்ட மற்றும் சிக்கலான செயல்முறையாகும், பல்வேறு அம்சங்கள் மற்றும் சிக்கல்களுக்குக் கவனம் தேவை. ஒரு மிக முக்கியமான பிரச்சினை அந்நியப்பட்ட தரப்புகளிடையே பகிரப்பட்ட அடையாளத்தை நிறுவுவதாகும். இது ஒரு சிக்கலான செயல்பாடாகும், இது தற்போதைய அடையாளங்களின் பகுப்பாய்வை உள்ளடக்கியது - ஒரு சமூகத்திற்குள் விவரிக்கப்பட்டது மற்றும் அதற்கு வெளியே உள்ளவர்களுக்கு விவரிக்கப்பட்டது - அத்துடன் ஒவ்வொரு தரப்பினராலும் பராமரிக்கப்படும் வரலாற்றின் வெவ்வேறு பதிப்புகளைத் தீர்ப்பது.

இருப்பினும், பகிரப்பட்ட அடையாளத்தின் நோக்கம் பொதுவான கடந்த காலத்தை உருவாக்குவது மட்டுமல்ல, வேறுபட்ட எதிர்காலத்திற்கான தளத்தை வழங்குவதும் ஆகும். நல்லிணக்கத்தை அடைவதற்கு மோதலுக்குப் பிந்தைய பகிரப்பட்ட அடையாளத்தைத் தேடும் போது, சமரசத்திற்கான உலகளாவிய சூத்திரம் அல்லது உத்தி எதுவும் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நல்லிணக்கச் செயல்பாட்டில் காலப்போக்கில் மேலும் சுமைகள் குவிந்து கிடக்கின்றன என்ற உண்மையை அறியாமல், சமரசத்தில் பேச வேண்டிய விஷயங்களாகப் போட்டியிடும் பிரச்சினைகளை மட்டுமே பார்க்க வேண்டும் என்ற தூண்டுதலும் உள்ளது.

காலம் அனைத்தையும் குணமடையச் செய்யும்” என்ற பழமொழியை நாம் ஏற்கும்போது, கடந்த காலத்துடனான நமது உறவு காலப்போக்கில் மாறுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். இதற்கு கடந்த காலத்தை நிராகரிக்க வேண்டிய அவசியமில்லை, மாறாக அதனுடன் ஒரு மாற்றப்பட்ட உறவை ஏற்படுத்த வேண்டும். மன்னிப்பு என்பது இந்த உறவின் மாற்றத்தின் மிக முக்கியமான பரிமாணமாகும், குறிப்பாக ஒரு நச்சு கடந்த காலத்திற்கு.

மன்னிப்பதில் ஒருவர் மறப்பதில்லை, ஏனென்றால், தன்னைத்தானே குறைத்துக் கொள்ளாமல், ஏற்பட்ட இழப்புகளைக் குறைத்து மதிப்பிடாமல், தன் வாழ்க்கையை மாற்றியமைத்த ஒன்றை மறக்க முடியாதா? மன்னிப்பது

என்பது மறப்பது அல்ல, மாறாக வேறு வழியில் நினைவில் கொள்வது. கடந்த காலத்துடன் வித்தியாசமான உறவில் நுழைவதற்கு வித்தியாசமான முறையில் நினைவுபடுத்தும் இந்த சாத்தியம்தான் இங்கு ஆராயப்படுகிறது.

ஏனென்றால், இந்த மாறிவரும் உறவுகளே, எந்த வகையிலும் பிரிந்துவிட்ட அல்லது பிரிந்திருக்கும் கட்சிகளுக்கு இடையே ஒரு புதிய, பொதுவான அடையாளத்தை ஏற்படுத்துவதைச் சாத்தியமாக்குகிறது.

ஆனால், வெற்றியாளரின் மனநிலை மற்றும் சிங்கள பௌத்தர்கள் மீது ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஒரு காலத்தில் அரசுக்கு சவால் விட்ட தமிழர்கள் மீது அது கொண்டுள்ள ஆதிக்கத்திலிருந்து பெறப்பட்ட நல்லிணக்கம் பற்றிய அதன் சொந்த புரிதலையும் விளக்கத்தையும் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. ஒரு பொது அர்த்தத்தில், நல்லிணக்கம் என்பது நல்லொழுக்கமுள்ள சமூகத்தை மீட்டெடுப்பது என்ற அடிப்படையில் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. இந்தக் கணக்கில், தவறு செய்தவர் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் (அவர்களைத் தார்மீகச் சமமானவர்களாகக் கருதத் தவறியதன் மூலம்) அவர்கள் தொந்தரவு செய்த தார்மீக சமூகத்திலிருந்தும் (பொதுவாகப் பகிரப்பட்ட விதிமுறைகளை மீறுவதன் மூலம்) குற்றவாளியை அந்நியப்படுத்துகிறது. குற்றவாளியின் தவறுகளை ஒப்புக்கொள்வதன் மூலம் தொடங்கப்பட்ட நல்லிணக்கம், மன்னிப்பு மற்றும் இறுதியில் சமூகத்தின் மறுசீரமைப்புக்கான வழியைத் திறக்கும் வருந்துதல் மற்றும் இழப்பீடு ஆகியவற்றைத் தொடர்ந்து வருகிறது.

பிளவுபட்ட சமூகங்களில், சமூகம் அல்லது வகுப்புவாத நெறிமுறைகளை முன்னிறுத்த முடியாது, ஏனெனில் நல்லிணக்கத்தின் அரசியல் சொந்தம் மற்றும் அரசியற் செயன்முறையின் விதிமுறைகளில் தங்கியுள்ளது.

## கடிதங்கள்

### கிழக்கில் நூலகர் வெற்றிடங்களை நிறப்புக

கிழக்கு மாகாண நூலகங்களில் நிலவும் நூலகர் தரம் 3 இற்கான வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தைக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக முதலமைச்சின் செயலாளர், ஆளுநர் ஆகியோர்களின் கவனத்திற்குக் கிழக்கு மாகாண நூலகப் பணியாளர் ஒன்றிய உபதலைவர் ஏ.ஏ.கமால்டீன் தெரியப்படுத்தியுள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் நூலகர் நியமனம் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், கிழக்கு மாகாணத்தில் நிலவும் நூலகர் தரம் 3 இற்கான நியமனம் நீண்ட காலமாக வழங்கப்படவில்லை.

இதேவேளை, அந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி நூலகர் நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உபதலைவர் சம்பந்தப்பட்டோர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– எச்.எம்.எம்.பர்ஸான்



பிரதி முகாமைத்துவ பணிப்பாளராக

# நிஷாந்த வீரசிங்க நியமனம்

ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், தனது பிரதி முகாமைத்துவப் பணிப்பாளராக நிஷாந்த வீரசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. சுகாதார பராமரிப்பு பிரிவின் பணிப்பாளராக இவர் தொடர்ந்தும் இயங்குவார்.

தமது புதிய நிலையில், நிறுவனத்தை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை தமது பரந்த அனுபவம் மற்றும் மூலோபாய நோக்கை பிரயோகித்து வழங்குவார். பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் விவசாய பணிப்பாளராக பணியாற்றும் ஜானக குணசேகரவுடன் இவர் இணைந்து செயலாற்றுவார். பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்களாக வீரசிங்க மற்றும் குணசேகர ஆகியோர் பவர் நிறுவனத்தின் தலைமைத்துவத்தை மேலும் வலிமைப்படுத்துவர்.

பவர் நிறுவனத்தின் சுகாதார பராமரிப்பு பிரிவை இலங்கை சந்தையில் கீர்த்தி மிக்க, துரித முன்னேற்றத்துக்கு உட்படுத்தி, தொழிற்துறையின் முன்னணி மூன்று நாமங்களில் ஒன்றாக திகழச் செய்வதில் வீரசிங்க முக்கிய பங்காற்றியிருந்தார். மருந்துப் பொருட்கள், மருத்துவ சாதனங்கள், இனங்காணல்கள் மற்றும் போஷாக்கு ஆகிய பிரிவுகளில் பரந்தளவு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இந்தப் பிரிவு வழங்குகின்றது.

அவரின் தலைமைத்துவத்தின் கீழ், சர்வதேச ரீதியில் சுகாதார பராமரிப்புத் துறையில் புகழ்பெற்ற நாமங்களான GSK, Sanofi, J&J (specialty care), Takeda (vaccine), Covidien மற்றும் Fresenius Medical Care போன்றவற்றுடன் இணைந்து,இந்தப் பிரிவு பல்வேறு புத்தாக்கமான மற்றும் உயிர் காக்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வெற்றிகரமாக அறிமுகம் செய்திருந்தது. மேலும், இந்தப் பிரிவுக்கு பெருமைக்குரிய தர நியம சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.



1990ஆம் ஆண்டு பவருடன் இணைந்து கொண்ட வீரசிங்க, மேற்பார்வையாளர், நிறைவேற்று அதிகாரி, முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், மாற்று பணிப்பாளர் மற்றும் அதனைத் தொடர்ந்து 2012ஆம் ஆண்டில் சுகாதார பராமரிப்பு பிரிவின் பணிப்பாளர் ஆக உயர்ந்து, பின்பு இன்றைய நிலைக்கு படிப்படியாக உயர்வடைந்திருந்தார். சரக்கு கையாளல், விநியோக சங்கிலி முகாமைத்துவம், வணிக செயற்பாடுகள் மற்றும் பொதுத் துறைக்கு சந்தை அணுகல் போன்றவற்றில் ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். நிறுவனத்துடன் 34 வருடங்களுக்கு மேலாக கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன், இவரின் தலைமைத்துவம் என்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

சுகாதார பராமரிப்பு துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியமை தொடர்பில் வீரசிங்க தொடர்ந்து கருத்துகளை வெளிப்படுத்தி வருவதுடன், ஒழுக்கமான செயற்பாடுகள் தொடர்பிலும் அழைப்புவிடுத்த வண்ணமுள்ளார். மேலும், மாற்றமடைந்து செல்லும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான தேவை தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றார். சந்தை செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் போன்றவற்றினால் தொழிற்துறையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்பதில் இவர் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார். கல்வி போன்ற புதிய மற்றும் பக்கபலமான துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டு, வியாபார பிரிவை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இவர் வெளிப்படுத்தியுள்ளதுடன், அதனூடாக பிரதான வியாபாரத்துக்கு ஏற்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகள் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

University of Wales Trinity Saint David இன் இணைந்த கல்லூரியிடமிருந்து MBA பட்டத்தை வீரசிங்க பெற்றுள்ளதுடன், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவ நிறைவேற்று கல்வித் திட்டத்தையும் தொடர்ந்துள்ளார்.

> **“ சந்தை செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் போன்றவற்றினால் தொழிற்துறையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்பதில் இவர் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார். கல்வி போன்ற புதிய மற்றும் பக்கபலமான துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டு, வியாபார பிரிவை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இவர் வெளிப்படுத்தியுள்ளதுடன், அதனூடாக பிரதான வியாபாரத்துக்கு ஏற்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகள் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்**

சஞ்சாரக உதாவில்

# Sun Siyam பாசிகுடா பங்கேற்பு

மாலைத்தீவுகளின் விருந்தோம்பல் ஹோட்டல் வர்த்தக நாமமான Sun Slyam ரிசோர்ட்ஸ் இன் அங்கமாக திகழும் Sun Slyam பாசிகுடா,

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சஞ்சாரக உதாவ 2024 வர்த்தக கண்காட்சியில் பங்கேற்றிருந்தது. துறைசார் விருந்தினர்களிடமிருந்து

பதினோராவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட சஞ்சாரக உதாவ ‘The Travel & Tourism Fair’ 2024 கண்காட்சியை, இலங்கை உள்ளக சுற்றுலா செயற்பாட்டாளர்கள் சம்மேளனம் (SLAITO) அதன் பிரதான நிகழ்வு பங்காளரான இலங்கை சுற்றுலாவுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. மே 17 மற்றும் 18 ஆகிய தினங்களில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நாடு முழுவதையும் சேர்ந்த 10,000க்கும் மேலாக பார்வையாளர்கள் பங்கேற்றதுடன், 500க்கும் அதிகமான காட்சி கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன.

ஐந்து நட்சத்திர ஹோட்டல் C169 மற்றும் C176 ஆகிய இரு காட்சி கூடங்களைக் கொண்டிருந்தது. விருந்தினர்களுக்கு பொருந்தும் வகையில் அமைந்திருந்த இந்த ஹோட்டல் காட்சிகூடம் Sun Siyam இன் சிறந்த வரவேற்பு உபசரிப்பு அனுபவத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது.

பொது முகாமையாளர் அர்ஷத் ரிபாய் கருத்துத் தெரிவிக்கையில், “முதன் முறையாக சஞ்சாரக உதாவ கண்காட்சியில் நாம் பங்கேற்றிருந்ததையிட்டு மிகவும் பெருமை கொள்கின்றோம். தொழிற்துறையைச் சேர்ந்த ஏனையோருடன் கைகோர்த்து, உலகின் சகல பாகங்களையும் சேர்ந்த விருந்தினர்களுக்கு எமது நாட்டின் பிரத்தியேகமான அம்சங்களை பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். கிழக்கின் விருந்தோம்பல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்க நாம் எதிர்பார்த்ததுடன், அதை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது” என்றார்.




கடந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் Sun Siyam பாசிகுடா தனது மறுசீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஹோட்டலை மீளத்திறந்திருந்தது. உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட மூலப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் பெறப்பட்ட தயாரிப்புகளிலிருந்து தமது ஹோட்டலை அலங்கரித்திருந்ததுடன், உள்நாட்டு கலைஞர்கள் மற்றும் சமூகத்தாருடன் இணைந்து தளபாடங்கள், chandeliers மற்றும் joinery பொருட்களை வடிவமைத்திருந்தது. அதன் Studio Sixty7 அலங்கார வடிவமைப்பாளர்களுடன், உள்நாட்டு வடிவமைப்புகளை மேம்படுத்தியிருந்ததுடன், பெருமளவு பிரத்தியேகமான உள்ளம்சங்களையும் காட்சிப்படுத்தியிருந்தது. அதனூடாக பாசிகுடா கரையோரப் பகுதியின் சிறந்த காட்சியமைப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

Sun Siyam பாசிகுடாவில் 34 இட வசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகள் பூந்தோட்டம் மற்றும் கடற்கரையை முகப்பாகக் கொண்ட பெவிலியன்களைக் கொண்டு அமைந்துள்ளன. சிறந்த உள்ளக காட்சியமைப்புகள், வர்ண அமைப்புகளையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

infinity pool அனுபவம் அல்லது karaoke இல் மனம் விரும்பியதைப் போல பாடல் பாடுவது. ஸ்பா சிகிச்சைகளுடன் ஓய்வு பெறுவது அல்லது டெனிஸ் அல்லது பூப்பந்தாட்டத்துடன் உடல்நிலையை திடமாக வைத்திருப்பது போன்ற அனுபவங்களைப் பெறலாம். உள்நாட்டு கலாசாரத்துடன் இணைவது அல்லது பாசிக்குடாவின் கரையோரத்தில் படகுகளில் சவாரி செய்வது, நட்சத்திரங்களின் கீழ் பிரத்தியேகமான இராப்போசணத்தை அருந்தி மகிழ்வது போன்ற பல சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கிழக்கு பிராந்தியத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மத்தியில், நாட்டின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதில் Sun Siyam பாசிகுடா முக்கிய பங்காற்றுகின்றது.

> **“ கிழக்கு பிராந்தியத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மத்தியில், நாட்டின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதில் Sun Siyam பாசிகுடா முக்கிய பங்காற்றுகின்றது**

## சிறைக் கிளிகள்..!

இல்லாத சொர்க்கத்தில்
எனது திருமணம்
நிச்சயிக்கப்பட்டதால் என்னவோ
நரகத்தில் இப்போதுநான்!

மண மாலைக்கும்
மாங்கல்யத்துக்குமாய்
மனமாய் நான்
கழுத்து நீட்டியது
ஒரு மனிதனுக்கே அல்ல
கழுதைக்குத் தானென்பதை
காலம் உணர்த்தியது
நாளாந்தம் அதுஎன்னை
காலால் உதைக்கிறது!
கல்லானாலும் கணவனாம்
உண்மையில்...
நிஜமானகல்லே அவனானதால்
நிதம் நான் எறியப்படுகின்றேன்!

புல்லானாலும் புருஷனென நான்
ஏற்றுக்கொண்டேன் அவனை
அந்தப் புல்லே என்னை
மண்ணில் போட்டு மிதித்து
நித்தம் நித்தம்
மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் !

அடக்கி ஒடுக்குவது
ஆண்களின் அழகாம் ஆளுமையாம்
அடங்கிப் போவது
பெண்களின் பூர்வீகமானமரபாம்
‘அடி’த்தல்லவா சொல்கிறான்
அவன்...!

குடித்துக் கும்மாளம் அடிப்பதும்
கொண்டவளை விட்டு
கண்டவளைத் தழுவி
கன சுகம் காண்பதும்
ஆண்மையின் தனித்துவமாம்
தத்துவமாம் கேளுங்கள்!

வேதங்களை
சாத்தான்கள் ஓத இங்கு
வெளிக்கிட்டபோது
இந்த வகை ஆண் பூதங்களுக்குத்தான்
என்னதான் குறைச்சலோ!

போடி தோழி நீயும் நானும்
சிறைக் கிளிகள்....
விடுதலைதான் எப்போது.....?

– ஷெல்லிதாசன் –





## தர்மம் செய்ய விரும்பாமை

விரும்பாமை மனிதனிடம்
விலகவேண்டும் - அதை
விலக்கிடவே நிலையாமை
அறிந்திடவேண்டும்
முடியாமை இருப்பவர்க்கு
வழி பிறந்திடவேண்டும்
முயலாமையை வாழ்வில்
களைந்திடவேண்டும்...

விரும்பாதவன் செல்வம்
வேகமாய் அழியும்
விதிவசத்தால் அவன் மரணம்
மோசமாய் நிகழும்
இறைக்கின்ற கிணறுதான்
இடைவிடாது ஊறும்
இரங்குகின்ற இடத்தில்தான்
இறையருளும் கூடும்...

தேங்கிநிற்கும் நீராலே
நோய்கள்தான் அதிகம்
தேங்கிவிடும் செல்வத்தால்
பாவங்களும் பெருகும்
தாங்கி நின்று தலைமுறையைத்
தர்மம்தான் காக்கும்
தர்மம் செய்யாச் செல்வந்தரின்
தடயத்தையே போக்கும்

சொத்துக்களால் சொந்த
ரத்தம் பகையாகும்
சொத்திருந்தால் வந்ததெல்லாம்
உறவாகும்
பெற்றவரைப் பிள்ளைகளே
திட்டித் தீர்க்கும்
பெற்ற பின்பு சொத்துக்களை
விட்டுக் கலைக்கும்.

பாண்டவரும் கௌரவரும்
குணத்தால் வேறு
பாரதப் போர் நடந்ததற்கும்
பகைதான் வேறு
அருச்சுனனும் அம்பெய்து
நடந்ததோ வேறு
அழிந்ததெல்லாம்
அருச்சுனின்
உறவினரே
பாரு...!



– நீலையூர் சுதா –

## நீ..!



என் இதயத்தின் மையத்தில்
ஒரு மெழுகுவர்த்தி
எரிந்து கொண்டேயிருக்கிறது.
அதன் திரியாக
ஒளிர்ந்து கொண்டிருக்கிறாய்
நீ...!

இந்த வெளியெங்கும்
நிரம்பியிருக்கும்
காற்றிலே நிறைந்திருக்கும் இசை போல்
என்னில் நிறைந்திருக்கும்
நீ...!

என்னைச் சுற்றி
சுழன்று கொண்டிருக்கின்றன
சொற்கள்
சொற்களை
கவிதைகளாக்கும்
மந்திரவாதிநான்
அந்த கவிதைகளின்
பாடுபொருளாய்
மாயம் காட்டுகிறாய்
நீ...!

–வி.மைக்கல் கொலின்–



## மாண்டு போவதற்கான சதி

தலைவிரித்தாடுகிறது
உன் நினைவுகள்...
கதகளி தொடங்கி
பரதம் வரைக்கும்
சிலம்பாட்டம் ஆடி
ஒய்கிறது நெஞ்சம்...
இதயம் தூரிகை இல்லை...
வண்ணங்களும் இல்லை...
உன் முகத்தைத் தானாகவே
வரைந்து கொள்கிறது
சகியே சகித்துக்கொள்ள
முடியவில்லையே...
சத்தியமாய் காதலைப்
பிரியம் பிரியம் என்று
பித்துப் பிடித்து அலைகிறேன்
நிசப்தமாய்
நிர்ப்பந்திக்கப்படுகிறேன்...
கண்ணீர்த் துளிகளைக்
கவிதையாக்கி கவிதை
செலுத்தவா...? காதல் என்ன
மாண்டு போவதற்கான சதியா...?
உயிருடன் மாய்ந்து தோய்வது
தான் காதலா...?
இந்த காதலின் அகராதியில்
இரக்கம் என்ற ஒன்று
இருக்கிறதா என்ன...?
காதலில் பால் சமத்துவம்
இல்லை போழும்- என்
அவலங்கள் புரியவில்லையே
உனக்கு...!
இந்திர விழாவும் திருவிழாவும்
மாறி மனம் விழாக்கோலம்
பூணுகிறது நெஞ்சம்....
உன்னைத் தரிசிக்க - என்
காதலை வழியனுப்பிய பிறகும்
நொடிகளில் கலந்து விடுகிறது
நெஞ்சத்தில்
இரக்கம் இல்லாத இதயத்தில்
இறங்கி விட உறக்கம் இல்லாமல்
ஏங்குகிறேன்...!
உன் முகம் பார்த்த
நிலவு எங்குப் போய்
ஒழிந்து
கொண்டதோ
தெரியவில்லை
தேடித் திரிகிறேன்
சமீப காலமாய்...!



– ரேகா சிவப்பிரகாசம் –
உடப்புசல்லாவை

“புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளிலிருந்து பிள்ளைகளைப்

# பாதுகாத்துக் கொள்வோம்”



உலக புகைத்தல் தடுப்பு தினம்

எது நாட்டின் சிறுவர்களையும், இளைஞர்களையும், புகையிலை நிறுவனத்தின் ஏமாற்று தந்திரோபாயங்களிலிருந்து பாதுகாத்தல் மற்றும் அவர்களை புகைத்தல் மற்றும் புகையிலைப் பொருள் பாவனைகளிலிருந்து விடுதலையாக்குதல்

“புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளிலிருந்து எமது பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்வோம்” என்பது இவ்வருடத்தின் உலக புகைத்தல் தடுப்பு தினத்தின் தொனிப்பொருளாகும். புகைத்தல் பாவனையினால் தினமும் சுமார் 50 பேர் அகால மரணமடைவதுடன் வருடாந்தம் சுமார் 20,000 இலங்கையர்கள் அகால மரணத்தைத் தழுவுகின்றனர்.

புகையிலை நிறுவனம் தினமும், இழக்கும் வாடிக்கையாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்குச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களையே முதன்மையாக இலக்கு வைக்கின்றனர்.

சர்வதேச ரீதியாகப் புகைத்தல் பாவனையினால் வருடாந்தம், 08 மில்லியன் (எண்பது இலட்சம்) மக்கள் அகால மரணமடைவதாக உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இவர்களில் 100,000 பேர் புகைப்பிடிப்பவர்களிற்கு அருகில் இருப்பதால் அதாவது இரண்டாம் நிலை புகைத்தலினால் தங்கள் உயிரை இழக்கிறார்கள்.

தற்போதைய காலகட்டத்தில் இத்தகைய பயங்கரமான அபாயகரமான மனித இழப்புக்களுக்கு உள்நாட்டுப் போர்களோ அல்லது வேறு எந்த காரணமோ பங்களிக்கவில்லை என்பது திண்ணம். எனவே, அனைத்து வகையான புகையிலை பொருட்களின் பாவனையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இலாபகரமானது அல்ல, மாறாக வல்லரசு நாடுகளுக்கு மாத்திரமே இலாபகரமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக, சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கும், புகையிலை பாவனையிலிருந்து பூகோளத்தை விடுதலை செய்வதற்காகவும் உலக சுகாதார நிறுவனம், 2003இல் புகையிலை பாவனையைத் தடுப்பதற்கான கொள்கை கட்டமைப்பை (Wu,O Framework Convention on Tobacco Control - FCTC) அறிமுகப்படுத்தியது, மேலும் உலகின் 183 நாடுகள் இதில் இணைந்துள்ளதோடு இலங்கை 2003ஆம் ஆண்டு இக்கொள்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

புகையிலை நிறுவனம் மற்றும் புகையிலை சார் உற்பத்தி நிறுவனங்கள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை அடிப்படையாக வைத்து, இவ்வருடத்தின் புகைத்தல் தடுப்பு தினத்தை மையமாகக் கொண்டு,புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளின் மனதில் புகைப்பிடித்தல் தொடர்பான நேர்மறையான எண்ணத்தை விதைத்து அவர்களை சிகரெட் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களாக மாற்றுவதற்காக பல்வேறு மட்டங்களிலும் விளம்பரங்களை மேற்கொண்டு வருகின்றது.

புகையிலை நிறுவனமானது, அவ்வகையான விளம்பரங்களுக்காக வருடாந்தம் சுமார் 8 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை சிகரெட் பாவனைக்கு ஈர்த்துக்கொள்வதற்கா பன்னாட்டு புகையிலை நிறுவனங்கள் முன்னெடுத்துவரும் விளம்பர தந்திரோபாயங்கள் சில,

1. சமூக ஊடக வலையமைப்புகள் மற்றும் பத்திரிகைகள் தொலைக்காட்சி, வானொலி மூலம் சிகரெட் பயன்பாட்டை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே கவர்ச்சிகரமானதாக மாற்றுதல்.

2. சமூக ஊடகங்கள் (Facebook, Instagram, YouTube) மூலம் புகையிலை நிறுவனத்தினால் ஊதியம் பெறுகின்ற சமூக ஆர்வலர்களை (Influencers) பயன்படுத்தி இளைஞர்களிடம் செல்வாக்கு செலுத்துதல்.

3. சிகரெட் பாவனைக்கான கவர்ச்சி இளைஞர்கள் மத்தியில் குறைவடைந்து வருவதால், நஷ்டமடைந்து வரும் சந்தையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இலத்திரனியல் சிகரெட்டை அறிமுகப்படுத்துதல்.

4. வெவ்வேறு (Brand) பெயர்கள் மற்றும் சுவைகளைப் பயன்படுத்தி சிகரெட் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

5. குறைந்த விலையில் சிகரெட்டுகளை அறிமுகப்படுத்தி விலையை அதிகரிக்காமல் பராமரித்தல்.

6. இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களில் சிகரெட் விளம்பரங்கள், பொதிகள் மற்றும் “வயது குறைந்தவர்களுக்கான விற்பனை தடை” போன்ற விளம்பரங்கள் மூலம் சிகரெட் பற்றிய ஆர்வத்தை உருவாக்குதல்.

7. பல்வேறு நிகழ்வுகள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக சிகரெட் பாவனையை ஊக்குவித்தல்.

8. “அபிஷேகம்” எனும் விஷேட வியாபார நாமத்தை விற்பனையாளர்களுக்கு வழங்கி அதனூடு விற்பனையாளர்களுக்கு பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்குவதனூடு சிகரெட் விற்பனையை ஊக்குவிப்பதற்கு முயற்சி செய்தல்.

தற்போது சிகரெட் பாவனையிலிருந்து விடுதலையாகி வரும் எமது நாட்டின் இளைஞர்களை மீண்டும் சிகரெட் பாவனைக்குள் ஈர்த்துக்கொள்வதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இலத்திரனியல் சிகரெட்டுகள் என்பது புகையிலை நிறுவனத்தின், மற்றொரு தந்திரோபாயமாகும், இது புகைப்பிடிப்பதை விட குறைவான தீங்கு விளைவிக்கும் மற்றும் குறைவான ஆபத்தானது என்று மக்களை நம்ப வைக்க பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்துகிறது.

புகையிலை நிறுவனமானது, பெரும்பாலும் இலத்திரனியல் சிகரெட்டுக்கள் “ஆபத்து குறைந்தவை”, “புகை இல்லாத பொருள்”, “ சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது”, “நாகரீகமானது” நுகர்வோரிற்கேற்ற உற்பத்தி பொருள் என பல வகைளிலும் விளம்பரங்களை மேற்கொள்கின்றனர். ஆரோக்கியமான மாற்று வழி என்ற போர்வையில் புதிய வாடிக்கையாளர்களைப் ஈர்த்துக்கொள்வதற்கான தந்திரோபாயங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் மூலம், புகையிலை நிறுவனங்கள் நீண்ட காலத்திற்கு சந்தேகத்திற்கு இடமின்றி, தீங்கு விளைவிக்கும் இரசாயணமான நிக்கொட்டின் தயாரிப்புகளைப் பயன்படுத்தத் தூண்டுவதன் மூலம் தங்கள் வாடிக்கையாளர்களை தங்கள் தயாரிப்புகளின் நுகர்வோர்களாக மாற்ற முயற்சிக்கின்றன.

சிகரெட் வடிகட்டிகள் பல்வேறு சுவைகள் மற்றும் நறு மணங்க ளைக் கொண்ட புகையிலை பொருட்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளைஞர்களையும் சிறுவர்களையும் சிகரெட்டை பயன்படுத்துவதற்கு துண்டும் வகையில் சட்டவிரோதமான மற்றும் நெறிமுறையற்ற தந்திரோபாயங்களை புகையிலை நிறுவனம் மேற்கொள்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணி இருந்தும் இலங்கையில் சிகரெட் பாவனை பாரியளவில் குறைந்துள்ளது. GATS கணக்கெடுப் பின்படி (Global adult tobacco), இலங்கையில்



சிகரெட் பாவனை 9.1 வரை குறைந்துள்ளது.

உலகில் சிகரெட் பாவனை குறைந்து வரும் நாடுகளில் இலங்கையின் நிலை சிறந்த நிலையில் காணப்பட்ட போதிலும், இன்னமும் எமது நாட்டில் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட்டைப் பயன்படுத்துகின்றனர்.

சிகரெட் பாவனையானது பாதகமான விளைவை ஏற்படுத்தும் அதே சந்தர்ப்பத்தில் நாட்டின் சுகாதார பிரச்சினைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், சிகரெட், புகைத்தல் காரணமாக காற்று, நீர், நிலம் மாசுபடுவதுடன் சுற்றுச்சூழலிற்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் நடாத்திய Global Youth Tobacco Survey - GYTS கணக்கெடுப்பு மற்றும் தேசிய ஆய்வுகளின்படி, இளைஞர்களிடையே புகையிலை பயன்பாடு சடுதியாக குறைந்து வருகிறது.

புகையிலை நிறுவன அறிக்கைகளின்படி, கடந்த வருடம் சிகரெட் உற்பத்தி 19% வீதத்தால் குறைந்துள்ளது.

சிகரெட் பயன்படுத்துபவர்களும் புகைப்பிடிப்பதை நிறுத்தும் சுய முயற்சியில் ஈடுபடுவது ஒரு சிறந்த நிலையாகும்.

குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் புகையிலை நிறுவனங்களின் அநாகரீக தந்திரோபாயங்களுக்கு எதிராக இளைஞர்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வு உருவாகி வருகின்றமையுடன், இளைஞர்களை புகைத்தலிற்கு ஈர்ப்பதானது புகையிலை நிறுவனங்களின் தந்திரமான செயல் என்ற புரிதலும், புகைத்தல் என்பது பலனற்ற முட்டாள்தனமான செயல் என்ற புரிதலும் உருவாகி வருகிறது.

இந்நிலைமையை மேலும் வலுப்படுத்தும் வகையில், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை புகைப்பொருள் பாவனைக்கு ஈர்த்துக்கொள்ளும் வீதத்தை குறைத்துக் கொள்வதற்காக, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் பின்வரும் ஆலோச னைகளை வழங்குகிறது.



## இன நல்லுறவினைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டம்





மாவட்டங்களுக்கு இடையில், இன நல்லுறவினைக் கட்டியெழுப்பும் விசேட வேலைத்திட்டம் சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஜ:.பர் தலைமையில் இடம்பெற்ற இவ்வேலைத் திட்டத்தின் கீழ் பலரும் கலந்துகொண்டனர்.



## ஏரியும் நினைவுகள்





■ புகஜிந்தன்

தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பொது நூலகத்தின் கதையின் ஏரியும் நினைவுகள் என்னும் கருப்பொருளில் ஆவணப்படத் திரையிடலும் கலந்துரையாடலும் யாழ்ப்பாண பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி ம.ரகுராம், தவத்திரு வேலன் சுவாமிகள், முன்னாள் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.இராதை, இலக்கியவாதிகள், தமிழ் சிவில் சமூக இளைஞர், யுவதிப் பிரதிநிதிகள், சான்றோர்கள், கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



## பாதயாத்திரை குழுவினருக்கு வரவேற்பு



■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் சந்நதி– கதிர்காம ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினருக்குத் திருகோணமலை கோபாலபுரத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.



## விசேட மீளாய்வுக் கூட்டம்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் களப்பு மீன்பிடிகளில் சட்டவிரோத மீன் பிடியைத் தடுத்தல் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் விசேட கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் தற்போதைய கள நிலைமைகளை ஆராயும் பொருட்டு விசேட மீளாய்வுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (29) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்தொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கா.மோகனகுமார், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர், மீனவ சங்கம் மற்றும் சமாசங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









இந்தியா

# ஜூன் முதலாம் திகதி இறுதிக்கட்ட தேர்தல்

இந்தியாவில் அடுத்த ஐந்து ஆண்டுகள் பிரதமர் நாற்காலியில் அமரப் போவது யார் என்பது குறித்து மக்கள் தீர்ப்பு எழுதி வருகின்றனர்.

ஏழு கட்டங்களாக நாடு முழுவதும் தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. முதல் கட்டத் தேர்தல் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெற்ற நிலையில், இறுதி மற்றும் 7ஆம் கட்டத் தேர்தல் ஜூன் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இதுவரை 486 தொகுதிகளுக்கு தேர்தல் முடிவடைந்துள்ளது.

ஜூன் 1ஆம் திகதி உத்தரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார், இமாச்சலபிரதேசம், ஜார்கண்ட், ஒடிசா, பஞ்சாப், சண்டிகார் ஆகிய 8 மாநிலங்களை சேர்ந்த 57 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதிக்கும் அன்றைய தினம் தேர்தல் நடைபெறுகிறது.



இந்நிலையில், இறுதி கட்டத் தேர்தலுக்கான பிரசாரம் வியாழக்கிழமை (30) மாலையுடன் நிறைவு பெறுகிறது.

பிரதமர் மோடி, கன்னியாகுமரி விவேகானந்தர் மண்டபத்துக்கு இன்று (30) முதல் சென்று தியானம் மேற்கொள்கிறார்.

7ஆம் கட்ட வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் முழு வீச்சில் செய்து வருகிறது. ஜூன் 1ஆம் திகதி காலை 7 மணி முதல் வாக்குப் பதிவு தொடர்ந்து நடைபெறவுள்ளது. மாலை 6 மணிக்கு வாக்குப் பதிவு முடிந்த பின்னர் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகும்.

ஜூன் 4ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை தொடங்கும். முதலில் தபால் வாக்குகளும் அதன் பின்னர் வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும். அன்று மதியத்திற்குள் இந்தியாவை அடுத்த ஐந்தாண்டுகள் யார் ஆட்சி செய்யப் போகிறார்கள் என்பது தெரியவந்துவிடும்.

சிவகங்கை

## குழந்தையை கொன்று புதைத்து நாடகமாடிய தம்பதி



சிவகங்கை அருகே 4 மாத குழந்தை புதைக்கப்பட்ட சம்பவத்தில் திடீர் திருப்பமாகப் பெற்றோரே குழந்தையைக் கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து 3 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சிவகங்கை அருகே நாட்டாகுடியைச் சேர்ந்தவர் சந்திரசேகர் (42). இவரது மனைவி மஞ்சு (25)அவர்களுக்கு 4 மாத ஆண் குழந்தை உள்ளது.

குடும்பப் பிரச்சினை காரணமாக கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இருவரும் சொந்த ஊரான நாட்டகுடிக்குச் சென்றுள்ளனர். அங்கு தனது குழந்தை இறந்ததாகக் கூறி, யாருக்கும் தெரியாமல் புதைத்து விட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சந்திரசேகரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், சம்பவத்தன்று, குழந்தையுடன் சென்ற தனது மனைவி மஞ்சு மீண்டும் வீட்டுக்கு வரவில்லை. அவரை கைபேசியில் தொடர்பு கொண்டபோது குழந்தையை ஒரு கோயில் அருகே பையில் வைத்துவிட்டு, சென்று விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அங்குச் சென்று பார்த்தபோது குழந்தை சடலமாகக் கிடந்தது. இதைத் தொடர்ந்து தனது தாயார் காளிமுத்துவுடன் சேர்ந்து குழந்தையின் உடலை மயானத்தில் புதைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லி

## பிரதமர் பதவியின் மாண்பை மோடி சீர்குலைத்து விட்டார் மன்மோகன் சிங் கடும் கண்டனம்



பிரதமர் பதவிக்குரிய மாண்பை நரேந்திர மோடி சீர்குலைத்து விட்டதாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பேசிய அவர், பிரதமர் அலுவலகத்தின் தகுதியையும் முக்கியத்துவத்தையும் மோடி மலினப்படுத்திவிட்டார்.

தேர்தல் பிரசாரம் முழுவதும் வெறுப்பு பேச்சையே மோடி பேசி வருகிறார். மக்களை பிளவுபடுத்தும் வகையில் மோடியின் தேர்தல் பிரச்சாரம் உள்ளது. இதற்கு முன்பு எந்த பிரதமரும் மோடியை போல வெறுப்பு பேச்சையோ, தரமற்ற உரையையோ, கீழ்த்தரமான வார்த்தைகளையோ பயன்படுத்தவில்லை.

குறிப்பிட்ட சமுதாயத்தினரையும் எதிர்க்கட்சிகளையும் தரம் தாழ்ந்த முறையில் மோடி விமர்சித்து வருகிறார். தனது வாழ்க்கையில் சமூகங்களுக்கு இடையில் எந்த பாகுபாட்டையும் தான் காட்டியதில்லை என்று மோடி பேச்சுக்கு மன்மோகன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## பிரித்தானிய பொதுத் தேர்தல்; வெளியான முக்கிய அறிவிப்பு

பிரித்தானிய பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாக வியாழக்கிழமை(30) கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து 5 வாரங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதன்படி பிரித்தானிய பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் கடந்த 24ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற இடைத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது.

அத்துடன், பொதுத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில், பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்விய டையும் என்று கூறப்பட்டி ருக்கின்றது.



அங்காரா

## காசா விவகாரத்தில் ஐ.நா செயல்பாடு குறித்து துருக்கி நாட்டு ஜனாதிபதி ஆவேசம்

தெற்கு காசாவில் உள்ள ரஃபா நகரத்தில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்துள்ள நிலையில், ஐ.நா. அமைப்பை துருக்கி நாட்டின் ஜனாதிபதி எர்டோகன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

“ஐ.நா-வின் ஆன்மா காசாவில் மாண்டுவிட்டது. தனது சொந்த ஊழியர்களை கூட அதனால் பாதுகாக்க முடியவில்லை. இன்னும் என்ன நடக்க வேண்டுமென காத்துக் கொண்டு உள்ளீர்கள். இஸ்லாமிய உலகத்துக்கும் நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவான முடிவை எடுக்க ஏன் தாமதம்? இஸ்ரேல், காசாவுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது” என அவர் பேசியுள்ளார்.

காசா மீதான தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் உலக நாடுகள் வலியுறுத்தி வரும் வேளையில், எகிப்து எல்லையோரம் உள்ள காசாவின் ஒரு பகுதியை இஸ்ரேல் படைகள் கைப்பற்றியுள்ளன.

மேலும், இந்த தாக்குதல் அடுத்த ஏழு மாத காலம் வரை தொடரும் என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த 26 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இஸ்ரேல் பாதுகாப்பு படை, காசாவின் ரஃபா நகரின் மீது நடத்திய தாக்குதலில் சுமார் 82 பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர்.

நூற்றுக் கணக்கானோர் காயம டைந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.



## துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஏழாமிடத்துக்கு முன்னேறிய பட்லர்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் ஏழாமிடத்துக்கு இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர் முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது போட்டியில் 84 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை பட்லர் அடைந்துள்ளார்.

இதேவேளை, தென்னா பிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகளில் 159 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் பிரண்டன் கிங்க், 13ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.சூரியகுமார் யாதவ், 2.பில் ஸோல்ட், 3.மொஹமட் றிஸ்வான், 4. பாபர் அஸாம், 5. ஏய்டன் மார்க்ரம், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.ஜொஸ் பட்லர், 8.பிரண்டன் கிங்க், 9.றீஸா ஹென்ட்றிக்ஸ், 10. றைலி றொஸோ.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கெதிரான குறித்த போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் றீஸ் டொப்லி, 10ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஒன்பதாமி டத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.வனிடு ஹசரங்க, 3.அக்ஸர் பட்டேல், 4.மகேஷ் தீக்‌ஷன, ரவி பிஷ்னோய், 6.ஜொஷ் ஹேசில்வூட், 7.ரஷீட் கான், 8.அகீல் ஹொஸைன், 9.றீஸ் டொப்லி, 10.தப்ரையாஸ் ஷம்சி.

முதல் அ்நிது சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.வனிடு ஹசரங்க, 2.ஷகிப் அல் ஹஸன், 3.மொஹமட் நபி, 4.சிகண்டர் ராசா, 5.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.



> 159 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் பிரண்டன் கிங்க், 13ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்

## ராமேஸ்வரனால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



பி.கேதீஸ்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கிணங்க தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கொத்மலை கல்வி வலயத்துக்குட்பட்ட பூண்டுலோயா (சீன்) விவேகானந்தா இந்துக் கல்லூரிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் வழங்கி வைத்தார்.


## பார்சிலோனாவின் முகாமையாளராக பிளிச்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவானது தமது புதிய முகாமையாளராக இரண்டாண்டு ஒப்பந்தமொன்றில் ஜேர்மனியின் முன்னாள் பயிற்சியாளராக ஹன்சி பிளிச்சை நியமித்துள்ளது.

ஜேர்மனியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து கடந்தாண்டு நீக்கப்பட்டிருந்த பிளிச், பார்சிலோ னாவின் முகாமையாளர் பதவியிலிருந்து கடந்த வாரம் நீக்கப்பட்ட ஸ்கெவியைப் பிரதியி டவுள்ளார்.



## மியூனிச்சின் பயிற்சியாளராக கொம்பனி



தமது புதிய தலைமைப் பயிற்சியாளராக வின்சென்ட் கொம்பனியை மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பயேர்ண் மியூனிச் நியமித்துள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான பேண்லியும், மியூனிச்சும் 10.2 மில்லியன்ன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் என நம்பப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையொன்றுக்கு இணங்கியமையையடுத்து பேர்ண்லியிலிருந்து விலகி தோமஸ் துஷெலை கொம்பனி பிரதியிடுகிறார்.

இப்பருவகாலத்தில் பிறீமியர் லீக்கிலிருந்து பேண்லி வெளியேற் றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் தம்பலகாமம் சம்பியன்

ஹஸ்பர் ஏ.எச்.



திருகோணமலை மாவட்ட மட்ட விளையாட்டு போட்டியின் மெய்வல்லுநர் போட்டிகளில் தம்பலகாமம் பிரதேச அணி சம்பியனானது.

இதில் ஐந்து தங்கப் பதக்கங்கள், ஆறு வெள்ளிப் பதக்கங்கள், மூன்று வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றிய தம்பலகாமம் ஆறாவது தடவையாகவும் மெய்வல்லுநர் போட்டிகளில் சம்பியனானது.

மேலும் கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டத்திலும் தம்பலகாமம் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 31, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.